முருகப்பெருமான் துணை

**மகான் மச்சமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.01.2023, செவ்வாய்கிழமை

1. தருமனாக தரணி காத்தருள
தவபலத்தை சக்தியாக மாற்றி
ஆறுமுகனாக அவதாரம் புரிந்த
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சிலை திங்கள்
குறைவிலா மூவாறோர் திகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 19 ம் நாள் 03.01.2023, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு மச்சமுனிவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான ஞானவான்கள் தன்னை
ஞானவழியாம் சன்மார்க்கம் வழியில்
நம்பிக்கையூட்டி தேற்றி வர
4. வருகவே அன்னதனால் உலகமக்கள்
வணங்கித் திருவடி பற்றியே
தருமவழிதனில் உதவி நன்கு
தவராஜனின் நோக்கம் நிறைவேற
5. நிறைவேற உலகம் எங்கிலும்
ஞானியரின் புகழை எடுத்துச்சென்று
குறைவிலா அன்னதான பலத்தோடு
குவலயம் அமைதி பாதுகாப்பை பெற
6. பெறவே தயவுநெறியாம் சன்மார்க்க
புண்ணியமார்க்கம் தழைக்க
அறத்தின் பலமாக மக்கள் சேர
அகிலம் எங்கிலும் மாற்றம்
7. மாற்றம் ஞானிகள் வெளிப்பாடாக
மக்களிடை சக்தி பரவியே
ஆற்றல் விரைந்து ஞானவான்கள்படை
அளவிலாப்பெருகி சிறந்துமே
8. சிறந்துமே ஞானவான்கள் தலைமை
செகமெல்லாம் போற்றும்படியே
அருந்தவசி அரங்கன் சீடர்களால்
ஆறுமுகனார் ஆசிபெற்றவர்கள் மூலம்
9. மூலமதில் ஞான ஆட்சி தானும்
மொழிகுவேன் உலகம் கண்டு
காலமதும் ஞான சித்தர் காலமாக
கலிதனை வென்று ஞானயுகமாகும்

10. ஆகவே இந்தவித அற்புதத்தை
அகிலத்தில் நடத்தும் வண்ணம்
மகான் அரங்கன் சேவை ஆற்றிட
மண்ணுலகில் ஞானியர் மார்க்கம்

11. மார்க்கம் தழைத்தால் பேருலகம்
மகான்கள் தலைமை கொண்ட
பார்த்துரைக்க ஞான உலகமாகும்
பாடிவந்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–